**தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் அவசியம் இல்லாமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு தேசிய நூதனசாலை காணிகள் மற்றும் கட்டிடங்கள் முறையே ரூபா 10 பில்லியனாகவும், ரூபா 800 மில்லியனாகவும் 2013 ஆம் ஆண்டினடிப்படையிலான மதிப்பீட்டு அறிக்கையில் இருந்தபோதும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் அதே பெறுமதியே காட்டப்பட்டிருந்தன. அக்காணியையும் கட்டிடங்களையும் மீள மதிப்பீடு செய்யும் கொள்கை கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை. அதற்குப் புறம்பாக, திணைக்களத்திற்குச் சொந்தமான 8 பிரதேச நூதனசாலைகளுக்குரிய காணிகளும் கட்டிடங்களும் மதிப்பீட்டுப் பெறுமதியிலோ அல்லது கிரயத்திலோ கணக்கிலிடப்படவில்லை. | சொத்துக்களை மீள மதிப்பீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுவதுடன் திணைக்களத்தின் சகல பிரதேச நூதனசாலைகளது காணிகளும் கட்டிடங்களும் கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவும் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒதுக்கீட்டுக் கணக்கில் திறைசேரியின் 2017 ஆம் ஆண்டிற்கான கட்டு நிதி ரூபா 255,311,638 ஆகியபோதும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 189,440,000 காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு மீதிகளும் மீளய்வாண்டு மீதிகளும் சரியாக ஒப்பிடப்பட்டவாறு காட்டப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூலதனச் சொத்துக்களை சுவீகரிப்பதற்கு ரூபா 10,460,915 செலவிடப்பட்டபோதும், நிதிசாரா சொத்துக் கூற்றில் ஆண்டிற்கான கொள்வனவு ரூபா 2,277,632 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, நிதிசாரா சொத்துக்கள் ரூபா 8,183,283 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டில் சுவீகரிக்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் சரிவர நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நிதிசாரா சொத்துக்களது அசைவு அறிக்கையில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 231,652,699 ஆகக் குறிப்பிடப்பட்டபோதும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக ரூபா 15,065,148 காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, நிதிசாரா சொத்துக்கள் ரூபா 216,587,551 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி 2018 சனவரி 01 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பிழையின்றி காட்டப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

## 1.6.4 பதிவேடுகளும் ஏடுகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### கணக்காய்வு அவதானிப்புகள்

| பதிவேட்டு வகை | | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) 11 ஆம் அனுபந்தம் | நாளதுவரை யாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | திறைசேரிச் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை . |
| (ஆ) | கணனி மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பதிவேடு பேணப்பட வில்லை. | திறைசேரிச் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| (இ) | பிணைப் பதிவேடு | நி.பி 891(1) | - மேற்படி - | நி.பி 891(1) பிரகாரம் பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | மின்சார உபகரணப் பதிவேடு | நி.பி 454(2) | - மேற்படி - | நி.பி 454(2) இன் பிரகாரம் பதிவேடு பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (உ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்கான கையிருப்புப் புத்தகம் | நி.பி 1647(ஈ) | - மேற்படி - | நி.பி 1647(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஊ) | வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேடு | நி.பி 1647(உ) | - மேற்படி - | நி.பி 1647(உ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (எ) | பொருட் கொள்வனவுக் குழுவினதும் | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் | - மேற்படி - | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவினதும் வருகையைக் குறிக்கும் பதிவேடு | கோவையின் 2.11.2 | கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான லக்சல கட்டிடம் தொடர்பாக ரூபா 602,217 தீர்வை செலுத்தப்பட்டபோதும், கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படவில்லை. | லக்சல கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் மூலப் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

**1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய சான்றிதழ்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மிளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

### 1.6.7 வரித் தேவைகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொள்வனவையும் உள்ளடக்கிய கொடுப்பனவு செய்யப்பட்ட 10 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்குரிய தெரிவுச் செவ்வைகளின்போது ரூபா 5,353,496 பெறுமதிசேர் வரி (VAT) கொடுப்பனவு செய்யப்பட்டமை கொடுப்பனவு உறுதிச் சான்றிதழ்களில் குறிப்பிடப்படவில்லை. அத்தொகை உள்ளடங்கலாக ஆண்டிற்கான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான விபரம் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.11 வழிகாட்டலின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படவில்லை. | பெறுமதிசேர் வரி உறுதிச் சான்றின் முகப்பில் காட்டப்பட வேண்டும். பொருட் கொள்வனவு வழிகாட்டி 5.4.11 வழிகாட்டலின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

### 1.6.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நி.பி 139(4) க்கமைய சகல கொடுப்பனவு உறுதிச்சான்றுகளுக்கும் முறையான பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2018 டிசம்பர் 31 இல் வரையப்பட்ட ரூபா 18,104,879 பெறுமதியான 11 காசோலைகள் வழங்கப்படாது 2019 மே 27 வரை கணக்காளர் வசமிருந்தது. | நி.பி 139(4) இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்கும் முறையான பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட 05 செயற்திட்டத்திலும் 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கப்பட 01 செயற்திட்டத்திலும் எஞ்சிய ரூபா 2,201,775 கூட்டுத் தொகையானது திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலையை | செயற்திட்ட முடிவில் எஞ்சும் தொகையை ஒப்பந்த காரர்களிடமிருந்து பெறுவதற்கு விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

நவீனமயப்படுத்திய ஒப்பந்தகாரருக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 முற்பணத்தை வழங்குதலும் தீர்வு செய்தலும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து விலகிய 5 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 544,309 மீதியை 4 முதல் 5 ஆண்டுகள் பூர்த்தியாகியும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | நி.பி 501(இ) பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

### 2.2 வங்கிக் கணக்குச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்கு வங்கியில் சமர்ப்பிக்கப்படாதிருந்த 06 மாதங்களைக் கடந்து ரூபா 190,836 பெறுமதியான 12 காசோலைகள் தொடர்பாக 396(ஈ) நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 396(ஈ) பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**3. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் திணைக்களம் தனது நோக்கெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக நிலைத்து நிக்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைவதை அளவிடுதற்கு சரியான தரவு அடிப்படைகளை ஏற்படுத்துவதற்குத் தவறியிருந்தது. ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து பணியாற்றியமை தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலைத்து நிற்கவல்ல இலக்குகளை நிறைவேற்றுவதற்கு சரியான தரவு முறைமைகளை ஏற்படுத்துவதுடன் அந்த நோக்கங்களை அடைவதற்கான இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச நிறுவனங்ளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 104 வெற்றிடங்கள் நிலவின. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை. | வெற்றிடத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்த்து நிறுவன நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ள வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |